இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 16 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 09 – ஞாயிற்றுக்கிழமை 25 ஆகஸ்டு 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 16 : Thiruvalluvar Year - 2055 - Aavani 09 - Sunday 25 August 2024 - Dak 12 Pages ₹ 5.00




ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும்! அதில் உயர்வு தாழ்வு இல்லை! ‘திராவிட மாடல்’ அரசு

# அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்யும் அரசு!

## பழனியில் ‘அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு’

## தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் உரை!







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.08.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத் துறை சார்பாக பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். பழனியிலிருந்து இத்தொடக்க விழா நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தருமபுரம் ஆதீனம் தவத்திரு தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் தவத்திரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான், லண்டன் துணை மேயர் பரம்நந்தா, மலேசிய முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பழனி, ஆக. 25 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.08.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக - பழனியில் நடைபெறும் “அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு” தொடக்க விழாவினைத் தொடங்கி வைத்து, மாநாட்டை வாழ்த்தி உரையாற்றுகையில், “ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும்! அதில் உயர்வு - தாழ்வு இல்லை” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், “அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்யும் அரசு இது!” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**காணொலி வாயிலாக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ‘அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு’ மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கு என்னுடைய வாழ்த்துகள்!

‘செயல்பாபு’ என்று என்னால் அழைக்கப்படும் சேகர்பாபு அவர்கள், அறநிலையத் துறை அமைச்சராக வந்த பிறகு, இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது!

“கோயிலை கவனித்துக் கொள்ளுங்கள்” என்று நான் அறநிலையத் துறையை அவரிடம் கொடுத்தேன். ஆனால், கோயிலிலேயே குடியிருக்கின்ற ஒருவர் உங்களுக்கு அமைச்சராக கிடைத்திருக்கிறார். நாள்தோறும் ஆன்மீகப் பெரியவர்கள் அறநிலையத் துறையையும், அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஏராளமான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது; திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. நானும் பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்திருக்கிறேன். அந்த வரிசையில், பழனியில் “அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு” ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### பக்தர்கள் உள்ளிட்ட அனைவரும் விரும்பும் ஆட்சி இது!

தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நடந்த மக்கள் பணிகளைப் பார்த்து தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபானந்த வாரியாரும் பாராட்டினார்கள். இன்றைய ஆட்சியை நீங்கள் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதன் அடையாளம்தான், பழனியில் நீங்கள் எல்லோரும் கூடி இருப்பது. அந்த வகையில், பக்தர்கள் உட்பட அனைவரும் விரும்பும் ஆட்சியாக கழக ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டவுடனே, அறநிலையத்துறை சார்பாக செய்யப்பட்டு வருகின்ற பணிகளின் பட்டியலைத் தரச் சொல்லி, அமைச்சர் சேகர்பாபுவிடம் கேட்டேன். அதில் அவர் குறிப்பிட்டிருந்த பணிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**‘செயல்பாபு’ என்று என்னால் அழைக்கப்படும் சேகர்பாபு அவர்கள், அறநிலையத் துறை அமைச்சராக வந்த பிறகு, இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது! “கோயிலை கவனித்துக் கொள்ளுங்கள்” என்று நான் அறநிலையத் துறையை அவரிடம் கொடுத்தேன். ஆனால், கோயிலிலேயே குடியிருக்கின்ற ஒருவர் உங்களுக்கு அமைச்சராக கிடைத்திருக்கிறார். நாள்தோறும் ஆன்மீகப் பெரியவர்கள் அறநிலையத் துறையையும், அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

★ பழனி, திருத்தணி, திருச்செந்தூர், மருதமலை, குமாரவயலூர், சிறுவாபுரி, காந்தல் ஆகிய ஏழு முருகன் திருக்கோயில்களில் பெருந்திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்கள் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருப்பதால், பக்தர்கள் நலனை மனதில் வைத்து, கோயில் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக 58.77 ஏக்கர் நிலங்களை 58 கோடியே 54 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கி கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

★ அறுபடை வீடு முருகன் திருக்கோயில்களில் 789 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 251 பணிகள் நடைபெற்று வருகிறது.

★ அறுபடை வீடு அல்லாத முருகன் திருக்கோயில்களில் 277 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 588 பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 69 முருகன் திருக்கோயில்களின் திருப்பணிகளை முடித்து குடமுழுக்கு விழா நடத்தப்பட்டிருக்கிறது.

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் நடத்துகின்ற கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற 4000 மாணவ, மாணவிகளுக்கு கட்டணமில்லாத காலைச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மதிய உணவும் வழங்கப்பட இருக்கிறது.

★ பழனி திருக்கோயிலுக்கு தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் திருவிழாக்களுக்கு பாதயாத்திரை வருகின்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, துறை நிலையிலான ஓய்வூதியம் வாங்குகிற 258 ஓய்வூதியதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு ஓய்வூதியம் 3000 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 4000 ரூபாயாக உயர்த்தியும், 54 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு 1500 ரூபாய்


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


---

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக. 25 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (24.08.2024) எழுதியுள்ள கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 11 மீனவர்களும் அவர்களது மீன்பிடி விசைப்படகும் நேற்று முன்தினம் (23.08.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள சம்பவம் மிகுந்த கவலையளிப்பதாகக் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 11 மீனவர்கள் INDTN06MM1054 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் (23.08.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை, தான் ஏற்கனவே பலமுறை சுட்டிக் காட்டியுள்ளதாகவும், 2024ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை 324 மீனவர்களும், 44 படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற தொடர் கைது நடவடிக்கைகளால் தமிழ்நாட்டு மீனவ சமூகத்தினர் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருவதுடன் அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த இரண்டு வாரங்களில், இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்கள் கடலில் மீனவர்களைத் தாக்கிய சம்பவங்களை சுட்டிக் காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டியது அவசியம் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைந்து விடுவிப்பதற்கு, உறுதியான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

வருகின்ற 31 மற்றும் செப்டம்பர் 1ஆம் தேதி நடைபெறுகிறது!

# ஃபார்முலா 4 கார் பந்தயம்: அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஆக. 25 -

ஒரே நேரத்தில் கார் பந்தயத்தை 8,000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய அளவில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. வருகின்ற சனிக்கிழமை அன்று பொதுமக்கள் காலையில் இலவசமாக பார்க்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து இடையூறு இல்லாமல் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வரும் ஆகஸ்ட் 31ம் மற்றும் செப்டம்பர் 1 தேதி ஃபார்முலா 4 கார் பந்தயத்தை நடத்த தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலத்தில் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பிறகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்,

சென்னையில் நடைபெறும் ஃபார்முலா 4 கார் பந்தயம் தொடர்பான ஆய்வு கூட்டம் தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்பட்டது. பெருநகர போக்குவரத்து காவல் துறை, தீயணைப்பு துறை உள்ளிட்ட அனைத்து துறை ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

இந்த பந்தயத்தை 8000 பேர் வரை நேரில் அமர்ந்து பார்க்கும் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வருகின்ற சனிக்கிழமை காலை பொதுமக்கள் இலவசமாக பார்க்கலாம். சனிக்கிழமை பிற்பகலுக்கு பிறகு, தகுதி சுற்று போட்டிகள் நடத்தப்படவுள்ளது. இரவு 10:30 வரை போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

போக்குவரத்திற்கு எந்த வித இடையூறும் இல்லாமல் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.